தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

மரம் 22 பிப்ரவரி 2022 கனி 3



MONTHLY THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்



"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 26
தலைப்பு : ஓய்வுநாள் - Sabbath
வேத வாசிப்பு : மத்தேயு 12:1-8

1. ஓய்வுநாளை பரித்தமாய் - யாத்.20:8
2. மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் - மத். 12:8
3. ஒழியப்பண்ணுவேன் - ஓசி.2:11

குடும்பமாக
கர்த்தருடைய
பணியைச் செய்ய
ஒப்புக்கொடுக்கப்பட்ட
கிறிஸ்துவின் சபை ஊழியர்கள்
தேவை
63793 50509



இவர்களுடைய
ஊழியத்திற்காக ஜெபியுங்கள்


K.R.K.Ravi Asir, Evangelist
CHURCH OF CHRIST
1/1170/1 Alankara Thattu West
TUTICORIN - 628 002
Cell:97890 24655
E-Mail:raviasir@gmail.com



**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்
**YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509




**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 22 பிப்ரவரி - 2022 கனி - 3


ஆசிரியருரை

## சிறுமையானவன்
## The Poor



வேதம் "உன் வாயைத் திறந்து, நீதியாய் நியாந்தீர்த்து, சிறுமையும் எளிமையுமானவனுக்கு நியாயஞ்செய்" என்று சொல்லுகிறது (நீதி.31:9). இன்றைக்கு எத்தனைபேர் இந்த விதமாக சிறுமையானவர்களுக்கு இரக்கம் செய்து நீதியாய் நியாயந்தீர்க்கிறார்கள்? முடிந்தவரை சிறுமையானவர்களை உபத்திரவப்படுத்துகிறதை தான் நாம் காண்கிறோம். ஒரு சிறு விவசாயி இருந்தால் அவனிடத்தில் இருக்கிற அந்த கொஞ்ச நிலத்தையும் எடுத்துக்கொள்ளும்படியாகவே பெரிய விவசாயி எண்ணுகிறான். இப்படியிருந்தால் சிறுவிவசாயி எப்பொழுது முன்னேறுவது? இப்படியே சிறுமையானவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். அவர்களிடம் இருக்கிறதையும் எடுத்துக்கொள்ளும்படியாக முயற்சிக்கிறார்கள். வேதம் சிறுமையானவர்களை நேசிக்கவேண்டும், அவர்களுக்கு உதவிடவேண்டும், அவர்களுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என போதிக்கிறது. யோசேப்பு சொல்லுகிறான்; "நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப்பண்ணினார் என்று சொல்லி, இளைவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான்" (ஆதி.41:52). யோசேப்பு பெரிய குடும்பத்தில் பிறந்தவன். ஆனால் அவனுடைய சகோதரர்களாலே தூக்கி இஸ்மவேலரிடம் விற்கப்பட்டவன். அடிமையாய் விற்கப்பட்டவன். எகிப்தின் அதிபதியானான். அவனோடு அவனுடைய தேவனாகிய கர்த்தர் இருந்தார். அப்படி தனிமையில் இருந்த அவன் எகிப்திலே திருமணமாகி அவனுக்கு பிள்ளைகள் பிறக்கும்போது அவனுடைய சிறுமையை எண்ணிப்பார்த்து தன் இளைய மகனுக்கு எப்பிராயீம் என்று பேரிடுகிறான். சிறுமையானவனுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று சொன்ன கர்த்தர் யோசேப்பின் சிறுமையை எண்ணிப்பார்த்தார். சங்கீதக்காரன் பாடும்போது; "எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை மந்தையைப்போலாக்குகிறார்" என்ற சங்.107:41-ன்படி யோசேப்பின் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டது. நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் சிறுமைப்பட்டு இருக்கிறேன் என்று கலங்குகிறீர்களா? கவலைப்படாதிருங்கள். யோசேப்பை பெலப்படுத்திய கர்த்தர் உங்களையும் உங்கள் சிறுமையினின்று மீட்டு இரட்சிப்பார்.

யோசியா என்ற ராஜா தன்னுடைய இராஜ்யபாரத்தில் " அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்; அப்படிச் செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே.22:16). புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் தேவனை

அறிகிற அறிவிலும், கர்த்தராகிய இயேசுவை அறிகிற அறிவிலும் வளருங்கள் என்று நிருபங்களில் வாசிக்கிறோம். ஆவியானவர் இந்த வசனங்களை எழுதும்படியாக ஆதி சீஷர்களை ஏவினதின் காரணம் என்ன? நம்மை உண்டாக்கின தேவனையும், அவரால் அனுப்பப்பட்ட ஆண்டவராகிய இயேசுவையும் அறிந்துகொள்வதே நித்திய ஜீவன். அவரை அறிகிற அறிவில் வளரும்போது இந்த விதமான சிந்தை நமக்குள் ஏற்படும். தேவனுக்குப் பிடித்தமான உபவாசங்களும், அவருக்கு செலுத்தும் காணிக்கைகளும் தள்ளுண்டவர்களை சேர்த்துக்கொள்ளுவதும், சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்து அவர்களுக்கு உதவிடுவதுமே தேவனுக்கு பிடித்தமானவைகளாக இருக்கிறது. அவர் தமக்கு யாதொன்று தேவையானதுபோல மனிதர்களுடைய கைகளில் பணிவிடைகொள்ளுகிற தேவன் நம்முடைய தேவன் அல்ல. இதை நீங்கள் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். இதை அறிந்த யோசியா ராஜா சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான். ஆகையால் சுகமாய் வாழ்ந்தான். அவனுடைய ராஜ்யபாரத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார். ஜனங்கள் சுபிட்சமாக வாழ்ந்தார்கள். இதை நீங்களும் செய்து தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள். மற்றபடி நீங்கள் கர்த்தருக்காக கணக்கில்லா காணிக்கைகளைக் கொடுத்தாலும் அது அவரை அறிகிற அறிவுக்கு நிகராகாது.

எளிமை என்று பார்க்கும்போது; தன்னைத்தான் தாழ்த்துவது எளிமையை குறிக்கிறதாக இருக்கிறது. அநேகர் தங்களை தாழ்த்துவதில்லை எப்பொழுதும் உயர்வாகவே தங்களை எண்ணிக்கொள்ள விரும்புகின்றனர். "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று இயேசு சொல்லுகிறார் (லூக்.14:11). இந்த வசனத்தின்படியாக தன்னைத்தான் தாழ்த்துகிறவர்கள் உயர்த்தப்படுவதை நாம் அறிகிறோம். மரியாள் என்ற ஸ்திரீயின் மூலமாக இயேசுபிறந்தார். அநேகருக்கு கிடைக்காத பாக்கியம் இந்த மரியாளுக்குக் கிடைத்தது. இதற்கு காரணம் என்ன? அவள் மற்ற சகோதரிகளைப் பார்க்கிலும் மேலான ஒரு பெண்ணா? இல்லையே. அவள் சொல்லும்போது; "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்; இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்று சொல்வதை நாம் லூக்.1:48-ல் படிக்கிறோம். ஆம், அவள் பாக்கியவதி என்று அழைக்கப்பட்டாள். தாழ்த்துகிறவர்கள் தேவனால் உயர்த்தப்படுவதை நாம் அறிகிறோம்.

அதைப்போல கானானிய ஸ்திரீயைப்பற்றி படிக்கும்போது அவளுடைய தாழ்மையை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. இயேசுவை நோக்கி: "அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்" (மத்.15:27,28). கீழே விழும் துணிக்கைகளைத் தின்னும் நாய்க்குட்டிகளைப்போல தன்னை தாழ்த்தி அந்த ஆசீர்வாதத்தையாவது தாருங்கள் என்று தன்னை முழுவதுமாக தாழ்த்தும்போது ஆண்டவர் அவளைப் பார்த்து உன் விசுவாசம் பெரிது என்றார். தாழ்மை என்பது இருதயத்திலிருந்து வரவேண்டிய ஒன்று. முகஸ்துதி செய்வார்கள். பார்த்தால் ஒன்று பின்பு காணாதிருக்கும்போது வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசுவார்கள். அப்படியிருந்தால் அது தாழ்மைக்கு அழகல்ல.

இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் ஆராய்ந்து அறிகிற தேவன் நம் தேவன். அவருக்கு முன்பாக தாழ்மைப்படுவோரை அவர் உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கிறார்.

"கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்" என சங்.138:6 சொல்லுகிறது. நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் தாழ்மையுள்ள வராயிருக்கிறீரா அல்லது எனக்கு நிகரானவர் யார் என்று சொல்லி மேட்டிமை கொண்டிருக்கிறீர்களா? கர்த்தர் உயர்ந்தவரும் சகலத்தையும் உண்டாக்கினவருமாயிருக்கிறார். அவருடைய சமுகத்தில் தன்னை தாழ்த்துகிறவனை அவர் நோக்கிப்பார்க்கிறார். மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்.

நாம் கஷ்டத்தில் இருக்கும்போது நம்மை யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள். நமக்கு வசதிவாய்ப்புகள் வந்துவிட்டால், நண்பர்களும் உற்றார் உறவினர்களும் எங்கிருந்தாலும் தேடி வந்துவிடுவார்கள். ஆனால் நம்முடைய தேவன் அப்படிப்பட்டவரல்ல. நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவர். ஆகையால் "நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது" என்று சங்கீதக்காரன் பாடுகிறார் (சங்.136:23). ஆம், நாம் தாழ்ந்தநிலையில் இருக்கும்போது நம்மை யாரும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் நம்மை உண்டாக்கின கர்த்தர் கண்ணோக்கினார். இப்பொழுது நமக்கு இருக்கும் ஆசீர்வாதம் அவரால் உண்டானது.

"இப்படி மீதியானியராலே இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்" (நியா.6:6). சிறுமைப்படுத்தப்படும்போது அநேகர் கர்த்தரை தூஷிப்பார்கள் அல்லது எங்களை இந்தவிதமான சிறுமைக்கு தேவன் ஒப்புக்கொடுத்துவிட்டாரே என்று ஓலமிடுவார்கள். ஆனால் இங்கே இஸ்ரவேலர் அவ்விதமாக செய்யவில்லை; கர்த்தரை நோக்கி ஜெபித்தார்கள். அவர்களுடைய விண்ணப்பத்தை கர்த்தர் கேட்டு, அவர்களை இரட்சிக்க அவர்களில் ஒருவனாகிய கிதியோனை தெரிந்துகொண்டார். அவனோ, "ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்" (நியா.6:15). எல்லா மனுஷனும் சொல்வதைப்போல இங்கே கிதியோனும் கர்த்தரை நோக்கிச் சொன்னான். நாம் சிலவேளைகளில் நம்முடைய சூழ்நிலையைப் பார்க்கிறோம். நம்மில் இருக்கிறவரை மறந்துபோய்விடுகிறோம். கிதியோனை கர்த்தர் சந்திக்கும்போது மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் அவன் களத்தில் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். அதற்கு அவன்: ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவைகளெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவர வில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுதும் கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே என்றான்.

"அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடேகூட இருப்பேன். ஒரே மனுஷனை முறியஅடிப்பதுபோல நீ மீதியானியரை முறியடிப்பாய் என்றார்" (நியா.6:16).

அந்தப்படியாக கிதியோன் என்று சொல்லக்கூடிய இந்த மனிதனைக்கொண்டு இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு தப்புவித்தார். ஒரே மனிதனைக்கொண்டு வெற்றிகொண்டார். மொத்தத்தில் வேதாகமம் முழுவதும் அவ்வப்போது ஒரே மனிதனைக்கொண்டே தேவன் பல காரியங்களைச் செய்துகொண்டுவருகிறார். யாக்கோபைக்கொண்டு தேவன் பெரிய காரியங்களை செய்தார். அவன் இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டான். மோசேயை தேவன் தெரிந்துகொண்டு பார்வோனின் கைகளினின்று இஸ்ரவேல் மக்களை விடுவித்தார். அதன் பின்பு யோசுவாவை தேவன் தெரிந்துகொண்டார். பின்பு நியாயாதிபதிகளில் கிதியோன் போன்றவர்களை தெரிந்துகொண்டார். பின்பு தாவீது போன்ற அரசர்களை தேவன் தெரிந்துகொண்டு இஸ்ரவேலை வழிநடத்தினார். தீர்க்கதரிசிகளில் இறுதியாக யோவான்ஸ்நானகனை தெரிந்துகொண்டு கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தும்படி செய்தார். கடைசியாக தம்முடைய ஒரே பேரான குமாரனை தெரிந்துகொண்டு அவர்கள் மூலம் உலக மக்கள் அனைவரையும் இரட்சித்துக்கொண்டுவருகிறார் என்பதை நாம் அறிகிறோம். ஒரே தேவன் ஒரே மனுஷனைக்கொண்டு இந்த உலகத்தில் அநேக சந்ததிகளை உண்டுபண்ணினார். அந்த ஒரே தேவன் கர்த்தராகிய இயேசு என்னும் ஒருவரைக்கொண்டு உலகத்தை இரட்சிக்கிறார். நீங்கள் இந்த உலகத்தில் சிறுமையானவர்களாக இருந்தாலும், எளிமையானவர்களாக இருந்தாலும் கவலைகொள்ளாமல் கர்த்தருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். அவர் உங்களுடைய சிறுமையை கண்ணோக்கிப்பார்ப்பார். உலகத்தில் நீங்கள் இருக்கும்வரை சிறுமையானவர்களை நேசியுங்கள். அவர்களுடைய நியாயத்தை விசாரித்து அவர்களுக்கு உங்களால் ஆன உதவிகளை செய்யுங்கள். அது தேவனுக்கு மிகவும் பிடித்த ஒன்றாக இருக்கிறது. இதை நீங்கள் செய்வீர்கள் என நாங்கள் நம்புகிறோம்.

**ஆண்டவர் சிலரை கடினமாக வழிநடத்துகிறாரா?**

கர்த்தர் தாம் நேசிக்கிறவர்களை கடிந்துகொண்டு சிட்சிக்கிறார் என காண்கிறோம். எரேமியா என்ற தீர்க்கதரிசி சொல்லுகிறார்; "ஆண்டவருடைய சினத்தின் மிலாற்றினால் உண்டான சிறுமையைக் கண்ட புருஷன் நான். ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார். அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார். அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை" (எரே.3:1,31-33). சிலவேளைகளில் கஷ்டங்கள் வந்தவுடன் கர்த்தரை மறுதலிக்கிறவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள்.

யோபு கஷ்டங்கள் வந்தவுடன் தன் மனைவிக்கு சொன்ன ஆலோசனை இவ்வளவு நாட்களாக நன்மைகளை அனுபவித்த நாம் தீமைகளையும் அனுபவிக்கவேண்டாமோ என கேட்கிறார். நல்லதே நடக்கவேண்டும் என்று எண்ணக்கூடாது. மேடு பள்ளம் இருந்தால்தான் காலத்திற்கு உதவும். தேவன் அப்படியே எல்லாவற்றையும் உண்டுபண்ணி யுள்ளார். கோடைகாலமும் மாரிகாலமும் மாறி மாறி வருதுபோல நன்மை தீமைகள் நம்முடைய வாழ்வில் வரும்போது அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய கோபத்தினால் சிறுமையைக்கண்டவர் எரேமியா. அவர் சொல்லுகிறார் அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார். இப்பொழுதும் முழுவதும் பாவத்தில் கிடக்கும் ஜனங்களை தம்முடைய குமாரன் மூலமாக இரட்சிக்கிறார் என அறிகிறோம். இரக்கங்களின் தேவனுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.



# அனுதின மார்க்கம்

## Daily Religion

*-J.C.Choate*

வேதாகமம் பல்வேறுவகையான மார்க்கங்களை குறித்து பேசுகிறது. ஆனால் அது கிறிஸ்துவின் மார்க்கமாகிய ஒரு சுத்தமான மார்த்தையே முன் நிறுத்துகிறது (யாக்.1:27). தேவனுடைய வார்த்தை பல்வேறுவகையான மார்க்கங்களை குறித்து பேசுகிறது மாத்திரமல்ல, அப்படிப்பட்டவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையிலும் கத்தோலிக்கம் மற்றும் பல நாமகரண பிரிவு கூட்டங்களின் வகையாக இருக்கின்றன. உதாரணமாக "ஒரு குறிப்பிட்ட காலத்தில் தங்கள் மார்க்கத்தை ஆசரிக்கிற குறிப்பிட்ட சில சபை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்; மற்றவர்கள் "பெரிய கூட்டத்தில்" நம்பிக்கையுடைய மார்க்கமாக இருக்கிறார்கள்; இன்னும் பலர் ஒரு "ஞாயிற்றுக் கிழமை" மார்க்கத்தாராக இருக்கிறார்கள்.

ஜனங்கள் பல்வேறுபட்ட கூடுகைகளில் பங்கு பெறுவதையும், தங்களுடைய மார்க்கத்தை வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்துவதையும் காணும் பொழுது அருமையாயிருக்கிறது. ஆனால் வருடத்தின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் மார்க்கத்திற்கேற்றவிதமாக இருப்பதென்பது போதுமானதல்ல. மேலும் ஒரு சுவிசேஷ கூட்டத்தில் ஜனங்கள் பங்கு பெறுவதை காணும்பொழுது அது உணர்ச்சியைத் தூண்டுவதாக இருக்கிறது; தங்கள் வருகையினாலே ஒவ்வொரு கூட்டத்திலேயும் துணை ஆதரவாக இருப்பது, மற்றவர்களையும் பங்குபெறும்படி உற்சாகப்படுத்துவது என்று இப்படியே தொடர்ந்து செல்கிறது. மீண்டும் தொடர்ச்சியாக சுவிஷேகூட்டங்களில் பங்கு பெற்று மார்க்கசம்பந்தமான காரியங்களில் பங்குடையவராக இருப்பது மட்டுமே போதுமானது அல்ல. இந்த சிந்தனைகளுக்கு தொடர்புடைய வகையிலே சபை அங்கத்தினர்கள் ஆராதனைகளுக்கு ஞாயிற்றுக்கிழமையன்று காலையிலும், மாலையிலும் செல்வதைக் காணும் பொழுது உண்மையிலேயே இருதயத்திற்கு உற்சாகம் ஊட்டுவதாக இருக்கிறது, ஆனால் முன்பு சொன்னபடியே தேவனை கர்த்தருடைய நாளிலே தொழுது கொள்கிறது மட்டும் போதுமானதாக இருக்கிறதில்லை, இவ்விதமாக அவர்கள் ஞாயிற்றுக்கிழமை மார்க்கத்தை மாத்திரம் வழக்கத்தில் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் கிறிஸ்துவின் மார்க்கத்தை வழக்கத்தில் கொண்டுவரவிரும்பினால் அது ஒரு அனுதின காரியமாக இருக்கவேண்டுமென்று வேதாகமம் சொல்லுகிறது. கிறிஸ்துவானவர் தாமே; "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை அநுதினமம எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று சொல்லுகிறார் (லூக்.9:23) கர்த்தர் தாமே என்ன சொல்ல வேண்டியதாயிருந்தது என்பதை நீங்கள் இப்பொழுது

கவனமாக சிந்தித்துப் பாருங்கள். முதலாவதாக எல்லாரையும் தம்மை பின்பற்றும்படி அவர் அழைக்கிறார். இரண்டாவதாக நாம் அவரை பின்பற்ற விரும்பினால் நம்மை நாமே வெறுத்துவிட வேண்டும் அல்லது உலகத்தின் காரியங்களை விட்டுவிடவேண்டும் என்று அவர் சொல்லுகிறார். கடைசியாக மூன்றாவதாக அவர் சொல்கிறார், நாம் அவரை பின்பற்ற விரும்பினால் நம்முடைய சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு அவரை பின்பற்ற வேண்டுமென்று கூறுகிறார். ஆகையால் கிறிஸ்துவின் மார்க்கம் என்பது ஒரு அநுதின மார்க்கம் என்பதை நீங்கள் காணமுடியும்.

ஒருநபருக்கு கிறிஸ்துவின் மார்க்கத்தை வழக்கத்தில் கொண்டுவர வேண்டுமானால் அவர் இது ஒரு முழு நேரப்பணி, ஒரு அநுதின ஒழுங்கு என்பதை அவர் அவசியம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒரு அநுதினமார்க்கத்திற்கு சில குறிப்பிட்ட விஷயங்கள் தேவையாயிருக்கிறது என்பதையும் அவசியம் அவர் உணர்ந்து கொள்ள வேண்டும். உதாரணமாக அநுதினமார்க்கத்திற்கு அநுதின விசுவாசம் அத்தியாவசியமானதாய் இருக்கிறது. இது கிறிஸ்துவின் மார்க்கத்தை வழக்கத்திற்கு கொண்டுவர விசுவாசத்தை எடுத்துக்கொள்கிறது. பவுல் நமக்கு "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்று தெரிவிக்கிறார் (ரோம.1:17). இத்துடன் கூடுதலாக அவர் "விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" (ரோம.14:23) என்று உரைக்கிறார். பின்னும் எபிரெயர் நிருப ஆசிரியர் விசுவாசமில்லாமல் தேவனுக்குப்பிரியமாயிருப்பது கூடாதகாரியமென்று கூறுகிறதை மறந்துவிடாதீர்கள் (எபி.11:6). கர்த்தர் நாம் எதை செய்யவேண்டுமென்று விரும்புகிறாரோ அதை நிறைவேற்றும்படியாக அநுதின மார்க்கமானது அநுதின விசுவாசத்தை எடுத்துக்கொள்கிறது.

அநுதின மார்க்கத்திற்கு அன்றாட அன்பு தேவையானதாயிருக்கிறது வேறெந்த ஒன்றிற்கும் மேலாக நாம் தேவனிடத்தில் அவசியம் அன்பு கூரவேண்டும். இத்துடன் கர்த்தர் கூடுதலாக மற்றொரு கட்டளையாகிய, "உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" (மத்.22:37-39) என்பதையும் சொல்கிறார். அப்போஸ்தலனாகிய யோவான் உரைக்கிறபடியே நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும். "பிரியமானவர்களே ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது" (1யோவா.4:7). கிறிஸ்தவர்கள் அன்புக்கு தூரமானவர்களாயிருந்தால் தேவனுக்கு ஊழியஞ்செய்ய முடியாது. அது ஒரு கூடாத காரியம் ஆனால் இதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள் அன்பைக் குறித்து பேசுவது மாத்திரம் போதுமானதாக இருக்கிறதில்லை, ஒருவர் அதை தன்னுடைய கிரியைகளினாலே நிரூபிக்க வேண்டும்.

அநுதின மார்க்கத்திற்கு அன்றாட ஜெபம் அத்தியாவசியமான தாயிருக்கிறது. பவுல் "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்று சொல்கிறார் (1தெச.5:17). கிறிஸ்தவனாயிருக்கிறவன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஜெபிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. அவன் தனக்காகவும், தன்னுடைய

சிநேகிதருக்காவும், சபை மற்றும் பல காரியங்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். ஒருவன் தேவனோடு ஐக்கியமாக இருக்க வேண்டியபடி இருப்பானேயாகில் தேவனை விட்டு விலகி அலைந்து திரிகிறவனாயிருக்க முடியாது.

அநுதின மார்க்கத்திற்கு அன்றாட வேதவாசிப்பு அவசியமானதாயிருக்கிறது. நாம் நம்மை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி நமக்கு வேத பாடம் அவசியமானதாயிருக்கிறது என்று பவுல் சொல்கிறார் (2தீமோ.2:15). இது ஆவிக்குரிய ஜீவயத்திற்கான ஆவிக்குரிய போஜனத்தை எடுத்துக்கெள்கிறது. இங்கேதான் வேதபாடமானது இந்த காட்சியில் பிரவேசிக்கிறது. இந்த பணியிலேதான் அநேகர் விழுந்து போகிறார்கள், இந்தகாரியம் அவர்களுடைய கிரியைகளினாலே வெளியரங்கமாயிருக்கிறது.

அநுதின மார்க்கத்திற்கு அன்றாட பணி, அன்றாடம் கொடுத்தல், அன்றாடம் புத்திகூறுதல், ஒரு அன்றாட முன்மாதிரி, இப்படியாக நீண்டு கொண்டே செல்கிறது. இங்கே நாமனைவரும் நினைவு கூர வேண்டிய மற்றொன்றும் இருக்கிறது. அநுதின மார்க்கம் அநுதின பலன்களைக் கொண்டுவருகிறது. இதுதான் எப்பொழுதும் உள்ள நிலைமையாக இருக்கும். இவ்விதமான மார்க்கத்தில் பழக்கமாயிருக்கிற ஒவ்வொரு ஆத்துமாவும் உதவியடைகிறதாக இருக்கும், அதன் விளைவாக அந்த ஆத்துமா மற்றவர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உதவக்கூடியதாக இருக்கும். எப்பொழுதுமே இவ்வகையான மார்க்கத்தில் காணப்படக்கூடிய வல்லமையை குறைவாக மதிப்பீடு செய்யக்கூடாது.

உங்களுடைய மார்க்கத்தை குறித்து என்ன? இவ்விஷயத்தில் நீங்கள் ஏதோ ஒரு வேலையைச் செய்கிறது போல இருக்கிறீர்களா அல்லது இது உங்களுக்கு தொடர்புடைய சிரத்தையுள்ள ஒரு காரியமாக தோன்றுகிறதா? இந்த காரியத்தில் ஒரு வாரத்தின் ஏழு நாட்களிலும், ஒரு நாளின் இருபத்து நான்கு மணி நேரத்திலும் செயல்படுகிறவர்களாக இருக்கிறீர்களா? இவ்வாறு இல்லையென்றால் இதற்காக முயற்சி செய்யுங்கள். அதன் விளைவுகளை நன்கு கவனியுங்கள்.

## நான் யார்? – Who Am I?




- என் தகப்பன் ஏலி (யாக்கோபு)
- நான் ஒரு தச்சன்
- எனக்கு நியமிக்கப்பட்ட பெண்ணை இரகசியமாய் தள்ளிவிட யோசனையாயிருந்தேன்
- கர்த்தருடைய தூதன் எனக்கு கட்டளையிட்டபடியே என் மனைவியைச் சேர்த்துக்கொண்டேன்
- குடிமதிப்பை எழுதும்படி நான் என் மனைவியை கூட்டிக் கொண்டு தாவீதின் ஊருக்குபோனேன்
- தேவதூதனால் எச்சரிக்கப்பட்டு இயேசுவை நாசரேத்திலே வளர்த்தோம்
- வருடந்தோறும் பஸ்கா பண்டிகைக்கு எருசலேம் செல்வோம்

**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



***தற்சோதனை பகுதி - 41***

**41. விவாகம்பண்ணினவர்களுக்கு கர்த்தருடைய கட்டளை என்ன?**


1. மனைவியானவள் தன் புருஷனைவிட்டுப் பிரிந்துபோகக் கூடாது
☐ வசன ஆதாரம் ------------------------------------------------
2. பிரிந்துபோனால் அவள் வேறொரு புருஷனை
விவாகம்பண்ணலாம் ☐ வசன ஆதாரம்--------------------------
3. அவிசுவாசியான மனைவி அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால் அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்கடவன்
☐ வசன ஆதாரம்------------------------------------------------
4. அவிசுவாசியான புருஷனை மனைவி தள்ளிவிடலாம் ☐ வசன ஆதாரம் -
5. அவிசுவாசியான புருஷனோ மனைவியோ பிரிந்துபோனால் போகட்டும்
இது சரியா? ☐ வசன ஆதாரம்----------------------------------
6. ஒரு புருஷன் தன் மனைவியை இரட்சிக்க முடியும் ☐ வசன ஆதாரம்-
7. நீ மனைவியோடே கட்டப்பட்டிருந்தால் அவிழ்க்கப்பட
வகைதேடாதே ☐ வசன ஆதாரம்----------------------------------
8. மனைவி இல்லாதிருந்தால் மனைவியைத்தேடு ☐ வசன ஆதாரம்
9. மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும்
பிரமாணத்தினாலே கட்டப்பட்டிருக்கிறாள் ☐ வசன ஆதாரம்---------
10. கணவன் மரித்தபின்பு அவள் அப்படியே இருப்பதால் பாக்கியவதியாக
கருதப்படமாட்டாள் ☐ வசன ஆதாரம் -------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW** *Contact Us: 94435 58041*

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




# காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமா!

*பிரசங்கி புத்தகத்திலிருந்து...*

**தே**வசமூகத்திலிருந்து ஞானத்தைப் பெற்ற ஞானி சாலொமோன் சொல்லுகிறார்: "என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை" 2:11.

"ஒருவன் புத்தி, யுக்தி, நிதானத்தோடு பிரயாசப்படுகிறான்; ஆகிலும் அப்படிப் பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு அவன் அதைச் சொந்தமாக விட்டுவிடவேண்டியதாகும்; இதுவும் மாயையும் பெரிய தீங்குமாய் இருக்கிறது. மனுஷன் சூரியனுக்குக்கீழே படுகிற எல்லாப்பிரயாசத்தினாலும் அவனுடைய இருதயத்தின் எண்ணங்களினாலும் அவனுக்குப் பலன் என்ன?" 2:21,22.


"என்னைப் பார்க்கிலும் சம்பிரமமாய்ச் சாப்பிடத்தக்கவன் யார்? என்னைப்பார்க்கிலும் துரிதமாய்ச் சம்பாதிக்கத்தக்கவன் யார்? தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார்; பாவஞ்செய்கிறவனுக்கோ தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்துவிட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்துக் குவித்துவைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார்; இதுவும் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது" 2:25,26.

"அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான். மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மைசெய்வதுமேயல்லாமல்,வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன். அன்றியும் மனுஷர் யாவரும் புசித்துக் குடித்துத் தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அநுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம். தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங் கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங்கூடாது; மனுஷர் தமது சமுகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச் செய்துவருகிறார்" 3:11–14.

"சூரியனுக்குக் கீழே நான் கண்ட வேறொரு தீங்குமுண்டு; அது மனுஷருக்குள்ளே பெரும்பாலும் நடந்துவருகிறது. அதாவது, ஒருவனுக்குத் தேவன் செல்வத்தையும் சம்பத்தையும் கனத்தையும் கொடுக்கிறார்; அவன் என்ன இச்சித்தாலும் அதெல்லாம் அவனுக்குக் குறைவில்லாமல் கிடைக்கும்; ஆனாலும் அவைகளை அநுபவிக்கும் சக்தியைத் தேவன் அவனுக்குக் கொடுக்கவில்லை; அந்நிய மனுஷன் அதை அநுபவிக்கிறான்; இதுவும் மாயையும், கொடிய நோயுமானது. ஒருவன் நூறு பிள்ளைகளைப் பெற்று, அநேகம் வருஷம் ஜீவித்து, தீர்க்காயுசை அடைந்திருந்தாலும், அவன் ஆத்துமா அந்தச் செல்வத்தால் திருப்தியடையாமலும், அவனுக்குப் பிரேதக்கல்லறை முதலாய் இல்லாமலும் போகுமானால், அவனைப் பார்க்கிலும் கருவழிந்த பிண்டம் வாசி என்கிறேன்" 6:1–3.

"பாவி நூறுதரம் பொல்லப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்" 8:12.

"காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்" 12:13,14.




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் -22**

**மூப்பர்களுக்கான தகுதிகள்**

1. **குற்றஞ்சாட்டப்படாதவன்**
2. **ஒரே மனைவியை உடைய புருஷன்**
3. **ஜாக்கிரரையுள்ளவன்**
4. **தெளிந்த புத்தியுள்ளவன்**
5. **யோக்கியமுள்ளவன்**

**கலந்துரையாடல்**

மூப்பர்களுக்கான தகுதியைப் பற்றிய பாடத்தை தொடங்குவதற்கு முன்பாக, ஒழுங்காக ஒன்றன்பின் ஒன்றாக முன்னுரையாக ஒரு சில காரியங்களை காண்போம். "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்" என்று 1தீமோ.3:1 சொல்கிறது. கர்த்தருடைய சபையில் ஒரு அலுவலர் ஆக விரும்புகிற ஒவ்வொரு மனுஷனும் அப்படிப்பட்ட வாஞ்சை உடையவனாக இருக்க வேண்டும் ஏனென்றால் அது ஒரு நல்ல வேலையாக இருக்கிறது. அது முதன்மையானதாக அல்லது அதிகாரம் உடையதாக இருக்கிறபடியால் அதை விரும்ப வேண்டாம், ஆனால் அது கர்த்தருக்காக வேலை செய்கிறதற்கு ஒரு வழியாக இருக்கிறபடியால் அதை விரும்பவேண்டும். அவர் ஒரு கடினமான பணிக்குள் பிரவேசிக்கத்தக்கதாக அவர் ஒரு மூப்பராக இருக்கும்படி அவசியம் விருப்பம் கொண்டவராக இருக்கவேண்டும். ஆனால் வேலையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவோ அல்லது எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்று மற்றவர்களுக்கு சொல்வதற்காகவோ அல்ல. ஒரு மூப்பருடைய வேலை என்பது ஒரு நிர்ப்பந்தமான வேலை, அநேகம் மணி நேரங்களையும், பெரும் முயற்சியையும் எடுத்துக்கொள்வதும் ஆகும். முதன்மையாக இருப்பதற்காக விரும்பியோ அல்லது அதிகாரத்தை விரும்பியோ கட்டாயம் தேடப்பட வேண்டாம். 1தீமோ.3:2 உரைக்கிறது "கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கிதை யுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்கவேண்டுமென்று". "இருக்கவேண்டும்" என்பது "அது கட்டுப்படுத்துகிறது", "அது தேவையானதாய் இருக்கிறது, அது அவசியம் ஆனதாயிருக்கிறது அல்லது "மிக முக்கியமான ஒன்றாயிருக்கிறது என்பதை குறிப்பிடுகிறது. இயேசு மத்.16:19 ல் சொன்னார் அப்போஸ்தலனாய் இருக்கிற ஒருவர் பூமியிலே கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டதாயிருக்கும் என்று மூப்பர்களுக்கான தகுதிகள் நிச்சமாக பரலோகத்திலும், பூமியிலும் கட்டப்பட்டதாயிருக்கும். ஒவ்வொரு குறிப்பும் "அவசியம்" தேவையானதா யிருக்கிறது. எல்லா தகுதிகளும் இல்லாமல் ஒரு மனுஷன் வேதவாக்கியங்களின்படி தகுதியடைவது என்பது இயலாத காரியம்.

**1. குற்றஞ்சாட்டப்படாதவன்**

"குற்றஞ்சாட்டப்படாதவன்" என்பது "நிந்தையற்றவனாய் இருப்பது" என்பதை குறிப்பிடுகிறது. குற்றஞ்சாட்டப்படாத ஒருவன் குற்றப்படுத்தப்பட முடியாது. எல்லா மனுஷரும் பாவஞ்செய்கிறபடியால் பாவ மற்ற பரிபூரண நன்மையை குறிப்பிடுகிறதில்லை (1யோவா.1:8). மாறாக இது ஒருவர் மிகவும் சிறப்பான முறையில் தன்னுடைய பாவங்களை மேற்கொள்ள முயற்சித்துக்கொண்டிருக்கிறார் என்பதை குறிப்பிடுகிறது.

அவர் மனந்திரும்ப, அறிக்கையிட, மற்றும் தன்னுடைய தவறுகள் அறிந்து கொள்கிற பொழுது ஜெபிக்க தீவிரமாயிருக்கிறார். இந்த விதமாக அவர் தன்னுடைய குணாதிசயத்தில் நிந்திக்கப்பட அல்லது குற்றஞ்சாட்டப்பட முடியாது. சகரியாவும் எலிசபெத்தும், குற்றமற்றவர்களாகவும், பிரமாணத்தை கைக்கொள்கிறவர்களாகவும் இருந்தார்கள் (லூக்.1:6). குற்றஞ்சாட்டப்படாத விதவைகள் சபையினாலே ஆதரிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது (1தீமோ.5:7). சவுல் நியாயப்பிரமாண நீதியைக் குறித்து குற்றஞ்சாட்டப்படாதவனாயிருந்தான் (பிலி.3:6). சகல கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாயிருக்கும்படியாக கட்டளையிடப்பட்டிருக்கிறது (1தெச.:23; 2பேது.3:14). இவ்வசனங்களில் இருந்து குற்ற மற்றவர்களாயிருப்பது சாத்தியம் என்று நாம் காண்கிறோம். மூப்பர்கள் தங்களுடைய குணாதிசயத்தில் நிந்தைக்கு அப்பாற்பட்டவர்களாக அல்லது குற்றச்சாட்டுக்கு அப்பாற்பட்ட மேலானவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.

**2. ஒரே மனைவியை உடைய புருஷன்**

இந்த அத்தியாவசியமானது இரண்டு காரியங்களை குறிப்பிடுகிறது. ஒரு மனுஷன் விசுவாசம் உடையவனாய் இருக்க வேண்டும், அவன் ஒரே மனைவியை உடையவனாயிருக்க வேண்டும். ஒரு மூப்பரானவர் விவாகம் ஆகாதவராகவோ அல்லது பல மனைவிகளை உடையவராகவோ இருக்கக்கூடாது. இவ்விஷயத்தில் மற்றெல்லா காரியங்களையும் போலவே அவர் முழு பிராந்திய சபைக்கும் முன்மாதிரியாய் இருக்க வேண்டும் (1பேது.5:3). ஒவ்வொரு மனுஷனும் தன் சொந்த மனைவியையும் ஒவ்வொரு ஸ்திரீயும் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாக இருக்கவேண்டும் (1கொரி.7:2) ஒரு புருஷனோ அல்லது மனைவியோ முதல் பங்குள்ளவர் உயிரோடு இருக்கையில் வேறொருவரை விவாகம் செய்து கொண்டால் அது விபச்சாரமாயிருக்கிறது (ரோம.7:1-3). இயேசுவானவர், தேவன் மோசேயின் பிரமாணத்தின் கீழாக மனுஷருடைய இருதய கடினத்தின் நிமித்தமாக மாற்றங்களை அனுமதித்திருந்த போதிலும், ஆதிகாலம் முதலே இது தேவனுடைய திட்டமாயிருந்தது என்று சொன்னார் (மத்.19:3-9). ஒரு மூப்பரானவர் ஒரே மனைவியை உடைய புருஷனாயிருக்க வேண்டும்.

**3. ஜாக்கிரதையுள்ளவன்**

ஜாக்கிரதையாயிருப்பது என்பது விழிப்புடன் இருப்பது. ஒரு இரவு காவலாளி ஜாக்கிரதை உள்ளவராயிருக்கிறார். சகல சாத்திமான ஆபத்துகளை குறித்து அவர் விழிப்புடன் இருக்கிறார். இஸ்ரவேலருடைய பட்டணங்களின் மதில்கள் மேலிருந்த காவலாளிகள் வரப்போகிற ஆபத்தைக் குறித்து அவர்கள் எச்சரிக்காதிருந்தால் ஜனங்களின் இரத்தப்பழிக்கு உள்ளாவார்கள் (எசேக்.3:17-19). எபி.13:17 சொல்கிறது மூப்பர்கள் சபை அங்கத்தினர்களின் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணி விழித்திருக்கிறார்கள் என்று. எல்லா கிறிஸ்துவர்களும் தெளிந்த புத்தி உள்ளவர்களும், விழித்திருக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும், ஏனென்றால் பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் (1பேது.5:8). மூப்பர்கள் மந்தைக்கு மேலாக விழித்திருக்கும் தங்களுடைய பொறுப்பை குறித்து உணர்வுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

**4. தெளிந்த புத்தியுள்ளவன்**

தெளிவாயிருப்பது என்பது தெளிந்த புத்தியுடன் இருப்பது, உணர்வுள்ளவராயிருப்பது மற்றும் தீவிரமாயிருப்பது. கிறிஸ்தவர்கள் இந்த பொல்லாத உலகத்தில் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் ஜீவிக்க வேண்டும் (தீத்து 2:12). சுவிசேஷம் சத்தியமும், சொஸ்த புத்தியுமுள்ள வார்த்தைகளைக் கொண்டதாயிருக்கிறது (அப்.26:2). நாம் தூங்காமல் விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம் (1தெச.:6). நம்முடைய சிந்தை தெளிந்த புத்தியை தரித்துக்கொண்டதாயிருக்க வேண்டும் (1பேது.1:13). நாம் கிறிஸ்தவ ஜீவியத்தின் சிரத்தையை சிந்தித்து பார்க்கவேண்டும் (1பேது.4:7; :8). ஒரு

மூப்பரானவர் ஜீவியத்துக்கான தெளிந்த புத்திக்குரிய உண்மைகளை குறித்து, அக்கறையற்றவராக இருக்க கூடாது. அவர் இலட்சியமான சிந்தையுள்ளவராகவும், ஆலோசனைகள் நிறைந்தவராகவும், குணாதிசயத்தில் நியாயமானவராகவும் இருக்கவேண்டும்.

**5. யோக்கியமுள்ளவன்**

மூப்பராக தகுதி பெறுவதற்கு ஒரு மனுஷனுடைய ஜீவியம், நல்லொழுக்கம் உடையதாகவும், சீரானதாகவும் இருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் மற்ற கிறிஸ்தவர்களுக்கு முன்பாக ஒரு சிறந்த முன் மாதிரியுடையவராகவும் சரியான நடக்கை உள்ளவராகவும் இருந்தார் (1தெச.2:10; 2தெச.3:7) நம்முடைய வாழ்க்கை முறையானது அவிசுவாசிகளை கிறிஸ்துவுக்காக வெற்றி கொள்ளும்படியாக அவர்களுக்கு முன்பாக உத்தமமானதாகவும், நன்மையானதாகவும் இருக்க வேண்டும்.(1பேது.2:12) ஒரு மூப்பருடைய ஜீவியமானது அவரை அறிந்திருக்கிற யாவருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கும்படி நேர்மையானதாகவும் உண்மையானதாகவும் இருக்க வேண்டும்.

**கேள்விகள்**

1. எந்த வார்த்தை "அது கட்டுப்படுத்துகிறது" என்ற வார்த்தைய குறிப்பிடுகிறது? ----------------.

2. 1தீமோ.3:1 சொல்கிறது ஒரு மனுஷன் நல்ல ------------- ----------- என்று.

3. அப்போஸ்தலருடைய போதனைகள் பரலோகத்திலும், பூலோகத்திலும் ---------------- ----------------- என்று.

4. குற்றஞ்சாட்டப்படாதவராயிருப்பது என்பது பொருள் ------------- ஆகும்.

5. குற்றஞ்சாட்டப்படாமல் இருப்பது என்பது பாவமற்ற பரிபூரண தன்மையை குறிப்பிடுகிறதா? --------------------.

6. ஒரே மனைவியையுடைய புருஷன் என்பது ஒருவர் ----------- அல்லது ஒருவர் ---------------- புறம்பானதாக இருக்கிறது.

7. ஜாக்கிரதையாய் இருப்பது என்பது ------------------ ------------- ஆகும்.

8. "தெளிவுள்ள" என்பதற்கான மூன்று வார்த்தைகள் கொடுக்கவும் ------------------------------ -----------------

9. "யோக்கியமுடையவன்" என்பதற்கான இரண்டு வார்த்தைகளை கொடுக்கவும் -------------- --------------------.

10. எசேக்.3:17-19 வசனங்களில் எந்த மனுஷன் விவரிக்கப்படுகிறார்?

## தெரிந்து கொள்ளுவோம்

*- K.R.K.Ravi Asir*

- **ஜப்பான் நாட்டு பாராளுமன்றத்தின் பெயர் டயட்**
- **ஆசிய வளர்ச்சி வங்கியின் தலைமையகம் மணிலா**
- **சாப்பிட்டவுடன் உடனடியாக சக்தியைக் கொடுக்கும் குளுக்கோஸ் நிறைந்த பழம் மங்குஸ்தான்**
- **இரத்த வெள்ளையணுக்களின் ஆயுட்காலம் 14 நாட்கள் மட்டுமே**
- **காந்திஜியின் உருவம் 42 நாடுகளின் தபால் தலையில் இடம் பெற்றுள்ளது**
- **யூதர்களை லட்சகக்கணக்கில் கொன்று குவித்த ஹிட்லரின் சமையல்க்காரன் ஒரு யூதன்**
- **பூனையை வீட்டு விலங்காக முதலில் பழக்கப்படுத்திய நாடு எகிப்து**

பெண்கள் பகுதி

## ஒருவருடைய குழந்தைகளைப் பயிற்றுவிப்பதற்கும் நல்லொழுக்கப்படுத்துவதற்குமான தீர்மானமின்மை

## The Decision Not Train and Discipline one`s Children

*-Betty*



இனங்களின் விருத்தி என்பது இயற்கையான ஒன்றும் உயிர்வாழ்வனவற்றின் முக்கியப் பகுதியாகவுமிருக்கிறது. இதைப் பற்றி சிறிது ஆராய்ந்து பேசுவது அவசியம். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட முதல் கட்டளை, “நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி.....” (ஆதி.1:28) என்பதாகும்.

ஜனங்கள் பிள்ளைகளைப் பெற்றிருக்கின்றனர். சில நேரங்களில் பெற்றோர்கள் இருவரும் கவனத்துடன் நிகழ்ச்சியின் நேரத்தைத் திட்டமிட்டு, எண்ணிக்கையுள்ள பிள்ளைகளுக்கு கொடுக்கவும், தங்கள் பிள்ளைகளின் சரீரம், மனவெழுச்சி, மற்றும் ஆவிக்குரிய தேவைகளில் கவனம் செலுத்தும்படிக்கும் அவர்கள் ஆயத்தம் செய்ய வேண்டுமெனவும் அறிந்திருக்கிறார்கள்.

ஆனால் பெற்றோர்களின் சார்பில் சம்பந்தமில்லாமலும் முன் எச்சரிக்கையில்லாமலும் உலகில் அடிக்கடி குழந்தைகள் பிறக்கின்றன. அவர்கள், சிறிதளவு பெற்றுக்கொண்டு பசியின் விளிம்பிலும் அல்லது கல்வி இல்லாமலும் வாழ்கின்றனர். மேலும், இவ்வுலகத்திலும்கூட அவர்கள் முன்னேற்றத்திற்கான தங்களுடைய விதியில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றனர், வரப்போகிற ஆவிக்குரிய நித்திய உலகில் மிகக் குறைவாகவே காணப்படுவார்கள்.

பெற்றோர்கள் உலகத்திற்குள் தாங்கள் கொண்டுவந்த உதவியற்ற சிறுபிள்ளைகளுக்கானப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும். தீமோத்தேயு5:8, “ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்” எனக் கூறுகிறது.

ஆனால் பிள்ளைகளுடைய சரீரத் தேவைகளை மட்டும் பூர்த்திசெய்வதைக் காட்டிலும் பிள்ளைகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதில் அதிகமான பொறுப்புகள் இருக்கின்றன. தொடர்ச்சியான போதனையும் பயிற்சியும் அவசியம், ஞானத்துடனும் அன்புடனும் உருவாக்கப்படவேண்டியதும், வயதான ஒருவருடைய தரிசனம். மேலும் குழந்தையாயிருக்கின்றவனை களிமண்ணிலிருந்து உருவாகின்ற ஒன்றைப் போலவும் இருக்கின்ற ஒன்றாகக் காட்டுகிறது.

நீதிமொழிகள் 22:6, “பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்” என வாக்களிக்கிறது.

ஆனால் இளம் பெற்றோர்கள் அதிகமாக அடிக்கடி குழந்தைகளைக் கட்டுப்படுத்துவதில்லை! குழந்தைகள் வடிவமைக்கப்படுவதும், பயிற்றுவிக்கப் படுவதும் பெற்றோர்களால் தொடர்ந்து முன்நோக்கி நடைபெற வேண்டியதா

யிருக்கிறது, மேலும் அவர்கள் அவர்களை வளர்ச்சியடையப்பண்ணுவதில் ஒருபோதும் அமைதியாயிருக்கக் கூடாது. ஒருவேளை அவர்கள் என்ன செய்யவேண்டுமென உறுதியில்லாதவர்களாய் இருக்கலாம். ஒருவேளை அவர்கள் மிகவும் கடுமையாயிருப்பதில் அச்சம் கொள்ளலாம், தங்களுடைய இளங்குழந்தையை இழிவுபடுத்துவதாகத் தோன்றலாம். ஒருவேளை அவர்கள் அவன் இப்போது புரிந்து கொள்ளுவதற்கு மிகவும் சிறியவனாயிருக்கிறான், மேலும் அவன் பெரியவனாகும் போது எப்படி நடந்துகொள்ளவேண்டுமென அவனுக்கு போதித்துக் கொள்ளலாம் என தங்களுக்குள்ளே தவறான தீர்மானத்தை உருவாக்கினவர்களாய் இருக்கலாம்.

இப்படிக் காத்திருப்பது பெற்றோரின் வேலையை மிக அதிகமாகக் கடினப்படுத்தும். ஒரு முரட்டாட்டம் பண்ணும், கூச்சலிடும், ஒழுங்கீனமான குழந்தை பெற்றோர்களுக்கு வெறுப்பூட்டுகிற குழந்தையாகயிருக்கும், வழக்கமாக பார்ப்பவர்களும் அவனுடைய நடத்தையை விரும்பமாட்டார்கள். மற்றபெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் மேல் அவனுடைய செல்வாக்கிருப்பதைக்குறித்து தங்களுடைய குழந்தைகள் இந்த தொந்தரவுக்குள்ளாகிவிடுவார்களென ஆத்திரமடையலாம். குழந்தை வளர்ந்து வருகையில், அவனுடைய நடவடிக்கை மோசமாகயிருந்தால் மற்றவர்கள் அவனோடிருக்க விரும்பமாட்டார்கள், அவன் அவர்களுடைய மனநிலையை அறிந்து, அதனால் வேதனையடைவான், இருந்தபோதும் அவன் மற்றவர்கள் தன்னை ஒதுக்குவதற்கான காரணத்தைப்புரிந்து கொள்ளாமலிருக்கலாம். இது சின்ன தொந்தரவு கொடுக்கிறவனாக வளர்ந்து வருவதிலிருந்து தங்கள் பிள்ளைகளை காப்பாற்றுவது பெற்றோருடைய கடமையாகயிருக்கிறது. அந்த குழந்தை ‘குற்றஞ்சாட்டப்பட்டு’ புறக்கணிக்கப்பட்டவனாயிருந்தாலும், இது அவனை நேசிக்கப்படாத, அருவருப்பான ஒருவனாக வளர அனுமதித்த பெற்றோரையே சாரும்.

உங்களுடைய குழந்தையைப் பயிற்றுவிப்பதில் கண்டிப்பில்லாத பழக்கத்தைக் கொண்டிருந்தீர்களானால், உங்களுடைய தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுங்கள். பெற்றோராக நீங்கள் செய்கின்ற வேலை உங்கள் வாழ்வில் மிக முக்கியமானதாக இருக்கிறது! இதை அற்பமாய் எண்ணாதீர்கள் அல்லது அதற்கு அதிகமான நாட்கள் உண்டு என நினைக்காதீர்கள். பல பாடங்களினூடே நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியது ஒவ்வொரு நாளினுடைய மிகமுக்கியமான தேவையாகும். நீங்கள் மதிப்புமிகுந்த சின்ன ஆத்துமாவை உலகிற்கு ஆசீர்வாதமாயிருக்கும்படிக்கு வடிவமைப்பதற்கு குறைந்த வருடங்களையே பெற்றுள்ளீர்கள்.

நீங்கள் வருங்கால ஒரு தகப்பனை அல்லது ஒரு தாயைப் பயிற்றுவிக்கின்றீர்கள் என்பதை நினைக்க வேண்டும், மேலும் நீங்கள் உங்கள் குழந்தைகளைப் பயிற்றுவிக்கும் முறையே அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதற்கு அடித்தளமாயிருக்கும்.

இவைகள் உங்கள் மனதில் கொண்டு பயிற்றுவிப்பதற்கான வழிமுறைகள்:

- ▶ வேண்டுகோலுக்கு உத்தரவு சொல்லும் முன் அல்லது ஆம் அல்லது

இல்லை என சொல்லும் முன், அதை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் செய்யப்போகிற காரியம் போதுமான அளவுக்கு முக்கியமானதாகயிருந்தால் நின்று நிதானியுங்கள்.

▶ ஆனால் நீங்கள் சிலவற்றைக்கூறினால், அதை நடைமுறைக்குக் கொண்டுவாருங்கள். இதுவே உங்கள் குழந்தை ஒழுக்கத்தின் பாதுகாப்பான எல்லைகளைக் கற்றுக் கொள்ள ஏதுவான வழியாகும். நீங்கள் அவனுடைய வழிகாட்டி, மேலும் நீங்கள் உங்களுடைய பொறுப்பினைக்குறித்து ஆழ்ந்த யோசனையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அவன் உட்காரவோ அல்லது மௌனமாயிருக்கவோ தேவவையில்லையென்றால், அதைச் செய்யும்படி சொல்லாதீர்கள். ஆனால் நீங்கள் அதைச் செய்யும்படி சொன்னால், அதற்குக் கீழ்ப்படியாமலிருக்க அனுமதிக்காதீர்கள்.

▶ கீழ்ப்படிதலுக்கு பாராட்டுதலோடு, அன்போடு, ஏற்றுக்கொள்ளுதலோடு சன்மானம் கொடுங்கள். கீழ்ப்படியாமைக்கு வேறுபட்ட திருத்தத்தோடும் தண்டனையோடும் கைமாறுசெய்யுங்கள். அவைகள் இவ்விதமாக இருக்கலாம் (1) வாய்மொழி திருத்தம் (2) சில உபகாரங்கள் அல்லது பொம்மை போன்றவற்றிற்கு மறுப்பு தெரிவித்தல் (3) அவன் கீழ்ப்படியத் தீர்மானிக்கும் வரை நாற்காலியில் அமரச்செய்தல் அல்லது தனியாக ஓரிடத்தில் நிற்கச்செய்தல் (4) கட்டுப்பாடோடே கையினால் அடித்தல் முறையில் சரீரப்பிரகாரமான தண்டனை அல்லது வேறு எந்தமுறையிலாவது உங்கள் குழந்தைகளைத் தண்டித்தல்.

▶ உங்களுடைய குழந்தையின் “கொச்சையான” கோமாளித்தனங்ககளைப் பார்த்து சிரிக்காதீர்கள் அவைகள் உண்மையாகவே கீழ்ப்படியாமையான செயல்கள். அவைகள் சரிசெய்யப்படவேண்டியவை. பெற்றோர்களின் ஒரு சிறிய முன் எச்சரிக்கை பல ஆபத்துகளிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர்களுக்கு உதவும். ஒரு சிறுகுழந்தை தன்னைத் தூக்கி வைத்துக்கொண்டிருந்த பாட்டியின் முகத்தை அடித்துக் கொண்டேயிருந்த அந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அந்த முதியவள், அவள் ஒரு சின்ன குழந்தைதான் உண்மையாகவே அவள் தீங்கு செய்யவில்லை என அறிந்து கொண்டவளாய் சிரித்துக்கொண்டிருந்தாள். ஆனால் அந்தக் குழந்தையின் தகப்பன் வேகமாய் வந்து அக்குழந்தையின் கையைப்பிடித்து எந்த புன்முறுவலையும் காண்பிக்காது மிகவும் கண்டிப்பாக செய்யாதே எனக் கூறினார். மேலும் அவர் “ நான் சிரித்தால்” “அவள் இது ஒரு விளையாட்டு என நினைப்பாள்” மேலும் இது மற்றவர்களை அடிப்பது அவளுக்கு சரியான செயலாகத் தோன்றும், அந்தச் செயலில் அவள் வளருவதை நான் விரும்பவில்லை, மேலும் அவள் அதைச் செய்யாதபடிக்கு காலஞ்சென்ற பிறகு நான் போதிக்கிறவனாக இருக்கவிரும்பவில்லை என்று விளக்கினார். எப்பேர்பட்ட ஞானமுடைவர் அவர்!

▶ குழந்தைப் பருவத்திலிருந்தே ஒரு குழந்தையை ஆவிக்குரிய காரியத்திலும் தேவனோடு ஐக்கியங்கொள்ளவும் பயிற்றுவிக்கத் தொடங்குங்கள் நாள் முழுவதும் வாழ்வின் ஒவ்வொரு நாள் காரியங்களும் நமக்கு எல்லாவற்றையும் கொடுத்து வருகிற நம்முடைய அன்பின் தேவனுக்குரியது. அவனுக்கு வேதவாக்கியங்களைக் கற்றுக்கொடுங்கள், அவன்

வேதபாடவகுப்புகளில் ஒழுங்காகப் பங்கேற்கிறானா எனக் கவனியுங்கள். இதுவே அவன் தேவன் மேல் தன் வாழ்வை அஸ்திபாரமிட்டு வளர்ச்சியடைவதற்கு அவனுடைய நினைவில் நீங்கள் உருவாக்குகிற இயல்பான அடித்தளமாகும். நீங்கள் அவனுடைய இருதயத்தில் இந்த சத்தியங்களை நிலைநாட்ட கொஞ்ச காலத்தையே பெற்றிருக்கிறீர்கள், எனவே தேவன் அவன் எவ்விதமான புயலைச்சந்தித்தாலும் வாழ்நாள் முழுவதும் அவனுடைய அடைக்கலமாயிருக்கிறார்.

அடிக்கடி, ஒரு குழந்தையைப் பயிற்றுவிப்பதில், ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான உலகத்திற்கிடையில் குழப்பங்கள் இருக்கும். ஞாயிற்றுக் கிழமையில் கிரிக்கெட் போட்டி அல்லது ஆராதனைக்குச் செல்லுவதை தெரிந்துகொள்ளுவதா என்ற குழப்பம் ஏற்படலாம். சமீபத்தில் ஒரு இளைஞன் தான் குழந்தையாயிருந்த போது ஆராதனையைப் பற்றி தன்னுடைய தகப்பனுடைய கண்டிப்பினையும் அவர்கள் ஒருபோதும் கூட்டத்திற்குக் காலதாமதமாய் செல்லக்கூடாது என்பதற்காக அவர்கள் தீட்டிய காலை நேரத்திட்டத்தைக் குறித்தும் கூட தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தான். இளைஞனாக, தன் விருப்பத்தின்படி தீர்மானங்களை உருவாக்குகின்றவனாக, “இப்போது என் தகப்பன் எனக்கு ஒரு ஆன்மீக உணவளிப்பவராக இருக்கிறார்” என்று சொன்னான்.

நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஒழுக்கமும், கவனமுள்ள போதனையும் இப்போதைக்கு தேவையில்லை எனத் தீர்மானித்திருப்பீர்களானால், தயவுசெய்து இக்காரியங்கள் எல்லாவற்றையும் நன்கு யோசித்துப் பாருங்கள். “எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்” (எபி.12:11).

கலாத்தியர் புத்தகத்திலிருந்து...

## கலாத்தியர் ஆறு அதிகாரங்களிலிருந்து நினைவூட்டல்கள்



1. **மனுஷனைப் பிரியப்படுத்தும்படி வாழாதே**
   **கலாத்தியர் 1:10**
2. **நீ உன் கடந்த காலத்தினால் வரையறுக்கப்படவில்லை**
   **கலாத்தியர் 2:20**
3. **உன்னுடைய தகுதி கிறிஸ்துவுக்குள் இருக்கிறது, உன்னுடைய உத்தியோகத்தில் அல்லது கல்வியில் அல்ல**
   **கலாத்தியர் 3:27**
4. **இனி நீ அடிமையாயிராமல் இப்போது தேவனுடைய புத்திரனாயிருக்கிறாய் – கலாத்தியர் 4:7**
5. **உணர்வுகளினாலும் உணர்ச்சிகளினாலும் நடத்தப்படாமல் ஆவியினால் நடத்தப்படுகிறவனாயிரு – கலாத்தியர் 5:25**
6. **நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமலிரு ஏற்றகாலத்தில் நீ விதைத்ததை அறுப்பாய் – கலாத்தியர் 6:9**

பெண்கள் பகுதி

# தேவனுடைய பிள்ளைகள்
# God`s Children

-Glory Arjunan



அநேகர், தங்களை தேவனுடைய பிள்ளைகள் என்றும், வழி வழியாக கர்த்தரைத் தெய்வமாகக் கொண்ட ஜனம் என்றும் கூறிக்கொள்ளுகின்றனர். நல்லது! ஆனால் பரிசுத்த வேதாகமம் யாரெல்லாம் தேவனுடைய பிள்ளைகள், தேவனுடைய பிள்ளைகள் எப்படியெல்லாம் நடந்துகொள்ளவேண்டும், அவர்கள் யாரால் நடத்தப்படுகிறார்கள்,அவர்களைக் குறித்து யார் சாட்சி கொடுக்கிறார் என்று பல விளக்கங்களைக் கொடுக்கிறது. எனவே வேதாகமத்தின்படி தேவனுடைய பிள்ளைகள் யாரென்றும் அவர்களது குணாதிசயங்கள் எவையெவை என்றும் ஆராய்வோம்.

**தேவனுடைய பிள்ளைகள் என்ற அதிகாரம் யாருக்கெல்லாம் கொடுக்கப்படுகிறது? யாரால் கொடுக்கப்படுகிறது?**

"அவருடைய (இயேசுவினுடைய) நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" என்று யோவான் 1:12 கூறுகிறது. இவ்வசனத்தின்படி ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தின்மேல் விசுவாசம் கொள்ளவேண்டும் பிறகு இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக மாறுகின்றார்கள். நாமாகவே நம்மை தேவனுடைய பிள்ளைகள் என்று உரிமைபாராட்டிக்கொள்ளவும் முடியாது, இயேசுவே தேவனுடைய பிள்ளைகாளகும் அதிகாரத்தை நமக்குக் கொடுக்கிறார்.

**தேவனுடைய பிள்ளைகள் என்ன செய்யக்கூடாது?**

உபாகமம் 4:1 ஐ வாசிக்கையில், "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் பிள்ளைகள்; செத்தவனுக்காக கீறிக்கொள்ளாமலும் உங்கள் கண்களுக்கு இடையிலே சவரம்பண்ணாமலும் இருப்பீர்களாக". என்று வாசிக்கிறோம். மேலும் எரேமியா10:2ல் "புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதிருங்கள்..." என்று கூறப்பட்டுள்ளது அப்படியானால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவருடைய உபதேசத்தைக் கைக்கொண்டு கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படுகிற நாம் எப்படியிருக்க வேண்டும் என்பதை சிந்தித்துப்பாருங்கள். இன்னும் நமக்குள் தேவனை அறியாத, தேவனற்ற புறஜாதிகளின் பழக்க வழக்கங்கள் காணப்படுகிறதா? நாள், நட்சத்திரம் பார்க்கிறோமா? அவர்களுடைய வழிபாட்டு முறைகளை கைக்கொள்ளுகிறோமா? செத்தவர்களுக்காக மொட்டை அடித்து, பானை உடைத்து, நெற்றியில் திலகம் வைத்து, சலங்கை ஒளிக்கத் திரிந்து மெட்டி அணிந்து இப்படி சகலவித பாரம்பரிய சடங்காசாரங்களையும் கைக்கொண்டு வருகிறோமா? சிந்தித்துப் பாருங்கள். தேவனுடைய பிள்ளைகள் என்னென்ன செய்யவேண்டுமோ அதைமட்டும் செய்வோம். அப்போது தான் நாம் நம்மை தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்ளமுடியும்.

தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம் (1கொரி. 3:16). தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? (1கொரி.6:16). "ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார்..." (1கொரி. 3:17). ஆகவே நாம் வேதாகமத்தின் போதனைபடி நடந்துகொள்ளுவோம்.

**தேவனுடைய பிள்ளைகள் யாரால் நடத்தப்படுகிறார்கள்?**

ரோமர் 8:14 ஐ வாசிப்போம், "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள், மேலும் தேவனுடைய புத்திரர்களுக்கு 'அப்பா, பிதாவே' என்று கூப்பிடுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியையும் தேவன் கொடுக்கிறார். நாம் யாரால் நடத்தப்படுகிறோம்? நம்முடைய அன்புக்குரியவர்களால் அல்லது உலகில் மரியாதைக்குரிய மனுஷர்களால் நடத்தப்படுகிறோமா? மோசம்போகாதிருப்போம். உண்மையாகவே நாம் தேவனுடையபிள்ளைகளாக இருப்போமென்றால் நிச்சயமாக அவருடைய ஆவியினாலே நடத்தப்படுவோம். "சத்தியஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்;...." என்று (யோவா.16:13) இயேசு சொன்னாரே. அவ்வாறே, "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்" (எபே.1:13) என்று வேதம் கூறுகிறது. ஆகையால் தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்கள் என்பதை அறிந்துகொள்ளலாம்.

**தேவனுடைய பிள்ளைகளைக் குறித்து யார் சாட்சி கொடுக்கிறார்?**

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்" என்று ரோமர் 8:16ல் வாசிக்கிறோம். இவ்வசனத்தின்படி நாமே நம்மைக் குறித்துச் சாட்சி கொடுக்க முடியாது என்று தானே பொருள். நம்மைக் குறித்து ஆவியானவர் தாமே சாட்சிக் கொடுக்கிறவராயிருக்கிறார்.

**தேவனுடைய பிள்ளைகள் எப்படிப் பிறந்தவர்கள்?**

"அவர்கள் (தேவனுடைய பிள்ளைகள்) இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்" (யோவா.1:13). என்று வேதம் கூறுகிறது. இவ்வசனத்தை வாசிக்கையில், நம்முடைய முன்னோர்கள், பெற்றோர்கள் தேவனை வணங்குகிறவர்களாக அல்லது கிறிஸ்தவர்களாக இருப்பதினால் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று உரிமை பாராட்ட முடியாது மாறாக தேவனாலே பிறந்தவர்கள் தான் தேவனுடைய பிள்ளைகள் என இவ்வசனத்தின் மூலம் தெரிந்துகொள்ளுகிறோம். இது ஆவியினால் பிறப்பதாகும். மாம்சத்தினாலும், இரத்தத்தினாலும், மற்றவர்கள் விருப்பத்தினாலும் பிறந்தவர்கள் தேவனுடைய பிள்ளைகளென உரிமை பாராட்ட முடியாது. இதைத் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவா. 3:3) மேலும் இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால்

தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்... மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" (யோவா.3:5-6) என்றார். ஆகையால் தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய ஆவியினாலே பிறந்தவர்களாயிருக்கிறோம்.

**தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்று எதினாலே வெளிப்படும்?**

தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்..." (1யோவா.3:9-10). என்று சொல்லப்பட்டுள்ளது. தேவனுடைய பிள்ளைகள் தேவனை உடையவர்களாயிருப்பர் அவர்கள் பாவஞ்செய்ய மாட்டார்கள். எல்லாரும் தேவனை உடையவர்களாக இருக்க மாட்டார்கள். "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்" (2யோவா.9). எனவே தேவனுடைய பிள்ளைகள் பிதாவையும் குமாரனையும் உடையவர்களாயிருப்பர்.

அன்பு சகோதரிகளே, நாம் இப்போது யாருடைய பிள்ளைகளாக இருக்கிறோம்? தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோமா அல்லது பிசாசின் பிள்ளைகளாக இருக்கிறோமா? மேற்குறிப்பிடப்பட்ட வசனத்தின்படி நம்மை ஆராய்ந்து பார்ப்போம். வசனத்தின்படி நடந்து நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று உரிமை பாராட்டிக்கொள்வோம். தேவன் தாமே நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படி நமக்கு அதிகாரம் கொடுப்பாராக! ஆமென்.

- **சீனாவில் உள்ள உகான் நகரில் தோன்றிய கொரோனா இன்றுவரை ஓய்ந்தபாடில்லை.**
- **இந்தியா முழுவதும் உள்ள 6,000 க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்களில் வேகமான மற்றும் இலவச Wi-Fi இணைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.**
- **கடந்த ஆண்டு 1லட்சம் விவசாய மின் இணைப்புகளுக்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.**

*நடப்புச் செய்திகள்*

ஜெபியுங்கள்

- இம்மாதத்தை காணசெய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள்
- இவ்விதழுக்காக...
- இம்மாத ஊழியங்களுக்காக...
- இவ்விதழின் வாசகர்களுக்காக...
- இந்திய தேசத்திற்காக...
- இனிவரும் காலங்களில் கொரோனா ஒழிய...
- இயேசுவை அனைவரும் அறிந்துகொள்ள...





The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

மாத இதழுக்கான
சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

சிறுவர் பகுதி

## பன்னிரெண்டு வயதில் இயேசு
### Jesus At The Age Of Twelve



ஹலோ தம்பி தங்காய் உங்களுக்கு இயேசு என்றால் ரொம்ப பிடிக்கும் தானே, ஆமா! இயேசுவுக்கும் உங்கள ரொம்ப பிடிக்கும். இயேசு சிறுபிள்ளைகள் என்னிடத்திற்கு வருவதற்கு இடம்கொடுங்கள் என்றார். ஒரு நாள் இயேசு அவருடைய தாய் தகப்பனோடு கூட பஸ்கா பண்டிகையில் கலந்துகொள்வதற்கு எருசலேம் போனாரு. அப்போது அவருக்கு வயது பன்னிரெண்டு. பண்டிகை நாட்கள் முடிந்து திரும்பி வரும்போது இயேசு எருலேமிலே இருந்துவிட்டார். இது அவருடைய தாயருக்கும் தகப்பனுக்கும் தெரியாதிருந்தது. அவங்க அவங்களுடைய ஊருக்கு வந்திட்டாங்க அங்கே அவரை தேடிப்பார்த்தா அவரை காணவில்லை. எனவே இயேசுவை தேடிக்கொண்டு திரும்பவும் எருசலேமுக்கு போனாங்க.

அவங்க இயேசுவைத் தேடிக்கொண்டு எருசலேமுக்கு வந்தபோது, இயேசு தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்துகொண்டு, அவர்கள் பேசுகிறதை கேட்டுக்கொண்டும் அவர்களிடம் கேள்விகள் கேட்டுக்கொண்டும் இருந்ததை பார்த்தாங்க, இயேசு போதகர் மத்தியில் கேள்விகள் கேட்டதை கண்ட எல்லாரும் இவர் சிறுவனாகத்தானே இருக்கிறார் இவருக்கு இப்படிப்பட்ட புத்தி எப்படி வந்தது என ஆச்சரியப்பட்டார்கள். அவருடைய அப்பா அம்மாவும் அதை கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டாங்க. இயேசுவைப் பார்த்து மகனே ஏன் எங்களுக்கு இப்படிச்செய்தாய். நானும் உன் தகப்பனும் எல்லா இடத்திலேயும் தேடி உன்னைக் காணாமல் மிகுந்த கவலையோடிருந்தோம் என்று சொன்னாங்க அதற்கு இயேசு என்ன சொன்னார் தெரியுமா? நீங்கள் என்னை ஏன் தேடினீர்கள்? நான் எப்போதும் என் பிதாவுக்கு பிரியமானதை பேசணும், பிதாவுக்கு பிரியமானதை செய்யணும் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டார். இப்படி பன்னிரெண்டு வயதிலேயே மிகவும் புத்தியாக பிதாவுக்கு பிடித்தமான காரியங்களை தேவாலயத்திலே உட்கார்ந்துகொண்டு போதகர் மத்தியில் பேசியிருக்காரு நமதாண்டவர் இயேசு.

நீங்களும் சர்ச்சுக்குப்போயி தேவனைப்பற்றியும் இயேசுவைப் பற்றியும் சொல்லுவதைக் கேட்டிருப்பீங்க. உங்களுக்கு இயேசுவைப் பற்றி தெரிந்துகொள்ள ஆசை தானே. அப்புறம் இயேசு அவர்களுடைய அப்பா அம்மாவோடு கூட சென்று அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இருந்தாரு. நீங்களும் உங்க அப்பா அம்மாவுக்கு கீழ்ப்படிந்து இருக்கிறீங்களா? அப்பா அம்மா சொல்லுகிறதை கேட்கிறீங்களா? இயேசுவானவர் இப்படி இருந்ததினாலே அவர் ஞானத்திலும் வளர்த்தியிலும் தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். நீங்களும் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள நம்மெல்லாரையும் சிருஷ்டித்த பிதாவாகிய தேவனுக்கும் உங்களுடைய பெற்றோர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்க. அப்பொழுது தேவன் உங்களோடு இருந்து, ஞானத்தைக் கொடுப்பாரு. **Bye,Bye!**

மனப்பாடவசனம் "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" – நீதிமொழிகள் 1:7

## வேத அறிவுப் போட்டி எண்: 258

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. யூதா ஜனங்கள் துரோகம்பண்ணினார்கள்; இஸ்ரவேலிலும் எருசலேமிலும் எவ்விதமான காரியம் செய்யப்பட்டது?
2. முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ, கர்த்தருக்குள் எப்படியிருக்கிறீர்கள்?
3. யோசேப்பு எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு முன்பாக நிற்கும்போது அவனுக்கு வயது என்ன?
4. கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன் என்றவன் யார்?
5. மாடு ஒரு அடிமையானவனையாவது ஒரு அடிமைப்பெண்ணையாவது முட்டினால் அதற்கு உடையவன் அவர்களுடைய எஜமானுக்கு எத்தனை சேக்கல் வெள்ளியைக் கொடுக்க வேண்டும்?
6. முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களை... அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது என்ன செய்தார்?
7. உங்களிடத்தில் வாசம்பண்ணுகிற அந்நியனைச் சுதேசிபோல எண்ணி, நீங்கள் உங்களிடத்தில் அன்புகூருகிறதுபோல அவனிலும் அன்புகூருவீர்களாக என்று யாருக்குச் சொல்லப்பட்டது?
8. அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும் என எந்த சபைக்கு பவுல் எழுதியிருக்கிறார்?
9. மன்னாவின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசிபோலிருந்தது என்பது சரியா?
10. உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்டுமா?

## வேதாகம ஆய்வு... 43

ஏலி - Eli

1. உயர்வானவன் என்று அர்த்தம்.
2. ஏலி இத்தாமரின் வம்சத்தில் முதல் பிரதான ஆசாரியன்.
3. இவனுடையகுமாரர் பேலியாளின் மக்கள் – 1சாமு.2:12
4. கர்த்தரின் பெட்டி பிடிபட்டதை அறிந்து மரித்தான் – 1சாமு.4:18
5. ஏலியின் குடும்பத்தாரின் அக்கிரமம் ஒருபோதும் மன்னிக்கப்படுவதில்லை – 1சாமு.3:14



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

February 2022

## சபையார் கூடுமிடத்தை சுத்தப்படுத்தும் பணியில் சபை ஊழியரோடு சேர்ந்து சபையார்கள்




இடம்: கெத்செமனே கார்டன் வத்தலக்குண்டு

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
**The Word of Christ,**
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

*Every Tuesday 6.00 P.M on Tamilan TV*
*Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV*
*Every Saturday 8.00 P.M on Nambikkai TV*

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
**THE WORD OF CHRIST**
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



love God
love people
be a servant